தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: இதற்கு யார்தான் காரணம்?**

First Published : 29 Dec 2010 12:22:13 AM IST
Last Updated : 29 Dec 2010 06:24:41 AM IST

வெங்காயத்தின் விலை குறையவில்லை; தக்காளி, பூண்டு விலை குறையவில்லை; சர்க்கரை விலை குறையவில்லை; அரிசி, பருப்பு, கோதுமை விலையும் குறையவில்லை; விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கையும் குறையவில்லை!

ஆமாம், 2008-ம் ஆண்டு தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும், 2009-ம் ஆண்டு தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. தேசிய குற்றப் பிரிவு வழக்குப் பதிவேட்டின்படி தற்கொலைக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ள விவரம் இது. 2009-ம் ஆண்டு, பல்வேறு காரணங்களுக்காக 17,368 பண்ணை விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது அதற்கு முந்தைய ஆண்டைக்காட்டிலும் 1172 சாவுகள் அதிகம். வேளாண் விளைபொருள்களின் விலை சந்தையில் குறையவில்லை. ஆனால் தற்கொலையும் குறையாது என்றால் எங்கே குறை? இதற்கு யார்தான் காரணம்?

இந்தியா வளரும் நாடாக இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. இங்குள்ள மிகப்பெரும் நுகர்வுச் சந்தைக்காக அமெரிக்க அதிபர் வந்து உடன்படிக்கையில் கையெழுத்திடுகிறார். சீன அதிபர் வருகிறார். ரஷிய அதிபர் வருகிறார். எல்லோரும் இந்தியாவுக்கு வந்து, இந்தியாவுடன் உறவை மேம்படுத்திக் கொள்கிறார்கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திடுகிறார்கள். ஆனால், வங்கிக் கடனுக்குக் கையெழுத்திட்ட விவசாயி மட்டும், இந்த நாட்டில் செத்துக் கொண்டிருக்கிறான். என்ன வேதனையான வேடிக்கை!

இந்தத் தற்கொலைப் பட்டியலில் 5 மாநிலங்கள் "பெருமை' சேர்த்துக் கொண்டுள்ளன. அவை: மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மாநிலங்கள். இங்கே முந்தைய ஆண்டைக்காட்டிலும் சராசரியாக 1000 தற்கொலைகள் அதிகரித்துள்ளதாகப் புள்ளிவிவரம் கூறுகிறது.

இந்த மாநிலங்களை விட்டுத் தள்ளுவோம். தமிழ்நாட்டின் நிலைமை என்ன? தமிழ்நாட்டைப் பொறுத்தவரை விவசாயிகள் தற்கொலை அதிகம் இல்லை என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் அதே நேரத்தில் வருத்தம் தரும் புள்ளிவிவரம் என்னவெனில், இந்தத் தற்கொலைகள் இப்போது இரட்டிப்பாகியுள்ளன. 2008-ம் ஆண்டில் 512 ஆக இருந்த விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை, 2009-ம் ஆண்டில் 1060 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் விவசாயத் தற்கொலைகள் குறைவு என்று தமிழக அரசு வேண்டுமானால் பெருமை பேசலாம். ஆனால், நிலைமை நன்றாக இல்லை என்பதைத்தான் இப்போதைய இரட்டிப்புச் சாவு எண்ணிக்கை வெளிப்படையாகச் சொல்கிறது.

விவசாயிகள் எண்ணிக்கை கிராமங்களில் குறைந்து வருகிறது. நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்கிறார்கள். இந்நிலையில், இருக்கும் விவசாயிகளும் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொள்வார்கள் என்றால் தமிழகத்தில் யார்தான் விவசாயத்தில் ஈடுபடப்போகிறார்கள்?

கரும்பு விளைவித்தால் விவசாயிக்கு லாபமில்லை. ஆனால் சர்க்கரை ஆலைகள் கோடிகோடியாய் லாபம் அடைகின்றன.

நெல் மூட்டைக்கு கூடுதல் விலை இல்லை. ஆனால் அரிசி மண்டிகள் இப்போதே ஜனவரி மாதத்தில் அரிசிக்கு என்ன விலை என்பதைத் தீர்மானித்து விட்டன. பொன்னி அரிசி தற்போதுரூ.800-க்கு (25 கிலோ) விற்கப்படுவது பொங்கலுக்குப் பிறகுரூ. 1000 என்று தீர்மானித்து, வாடிக்கையாளர்களிடம் இப்போதே வாங்கிக் கொண்டால் பிழைத்தீர்கள் என்று சொல்லவும் செய்கிறார்கள். ஆனால் விவசாயி, மத்தியக் குழுவின் வருகைக்காகவும், அரசின் அறிக்கைக்காகவும் காத்திருக்கிறான். அரசு இழப்பீடு வழங்கினாலும், லஞ்சம் போக அவன் கைக்குக் கிடைப்பது சொற்பமாகத்தான் இருக்கும்.

சிறுஉற்பத்தியான காய்கறிகளில்கூட விவசாயி லாபம் காண முடிவதில்லை. விலையை அவனால் நிர்ணயிக்கவே முடியாது. யாரோ விலையைத் தீர்மானிக்கிறார்கள். வெங்காயம் விலை உயர்ந்தால், கொத்தமல்லி, கறிவேப்பிலைகூட விலை கூடுகிறது. இந்த விலைஉயர்வில் 10 விழுக்காடுகூட விவசாயிக்குப் போய்ச் சேர்வதில்லை. இப்படித்தான் வேளாண் விளைபொருள்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன.

இன்றைய தமிழகத்தின் மிகப்பெரும் சவால் பாசன வசதியுடன்கூடிய விளைநிலங்களை அரசியல் பினாமிகள் வாங்கிப் போட்டு விவசாயம் செய்யாமல் தரிசாக வைத்திருக்கிறார்கள். இன்னொருபுறம் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குப் போதுமான மின்சாரம் கிடைப்பதில்லை. ஜெனரேட்டர் வைத்து நீர்இறைக்கும் சக்தி அனைவருக்கும் கிடையாது. பிறகு எப்படி விவசாயம் நடக்கும்?

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடந்த அரசு விழாவில், விஜயகுமார் என்கிற விவசாயி, தனக்குத் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்ட இலவச டி.வி.யை அமைச்சரிடமே மேடையில் திருப்பிக் கொடுத்துவிட்டு, "விவசாயிக்கு டி.வி. வேண்டாம், குறைந்தது ஒரு மாவட்டத்துக்காவது மின்தடையில்லாமல் செய்யுங்கள்" என்று கூறியிருக்கிறார். குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் இலவச டி.வி. வழங்குவதைக் காட்டிலும் முக்கியத்துவம் தரவேண்டிய பிரச்னைகள், குறிப்பாக விவசாயப் பிரச்னைகள் இருப்பதன் வெளிப்பாடுதான் இந்தச் சம்பவம். அரசு இதை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மற்றொரு மிகப்பெரும் தவறைத் தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது. தற்போது குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளில் 75 விழுக்காடு பயனாளிகள் கிராமத்தில் இருக்கும் விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள்தான். இத்திட்டத்துக்கு இரும்புக் கம்பி, சிமென்டை வழங்கிவிட்டு, அதற்கான தொகை போக மீதித் தொகையை வீடுகட்டியவருக்கும் தருகிறார்கள். ஆனால் இந்தத் தொகையில் வீடு கட்டவே முடியாது என்பதுதான் எதார்த்த நிலைமை.

அரசு குறிப்பிட்டிருக்கும் அளவின்படியே வீடு கட்டினாலும், குறைந்ததுரூ. 1.25 லட்சம் செலவாகிறது. அரசு தரும்ரூ. 75,000க்கு ஆசைப்பட்டு, மீதித்தொகையை கிராமப்புறங்களில் கடன் வாங்கி வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பலருக்கு இது சக்திக்கு மீறிய செலவு. அடுத்த இரு ஆண்டுகளில் இந்த வீட்டுக் கடன், வட்டியோடு பூதாகரமாக நிற்கப்போகிறது.

ஏற்கெனவே நஷ்டத்தில் சிக்கியிருக்கும் ஏழை விவசாயிக்கு இந்த வீட்டுக்கடன் பெரும் பிரச்னையாக உருவெடுக்கும்போது, இவர்களைக் காப்பாற்றப் போவது யார்?

"இந்தியா ஒரு விவசாய நாடு. விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு' என்று காகிதத்தில் எழுதிப்பிடித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏட்டுச் சுரைக்காய்...!

**30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 28 Dec 2010 11:09:09 AM IST

கிருஷ்ணகிரி, டிச. 27: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 30-ம் தேதி (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.

இதில், விவசாயிகஹள் கலந்துக் கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் வி. அருண் ராய் தெரிவித்துள்ளார்.

**ஆலங்குளத்தில் தக்காளி கிலோ ரூ. 50**

First Published : 28 Dec 2010 12:53:36 PM IST

ஆலங்குளம்,டிச.27: திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளத்தில், திங்கள்கிழமை தக்காளியின் விலை கடுமையாக உயர்ந்து காணப்பட்டது.

ஆலங்குளம் காய்கனிச் சந்தையில், கடந்த சில தினங்களாக தக்காளி கிலோவுக்கு

ரூ. 20- லிருந்து, தரத்திற்கு ஏற்ப ரூ. 30 வரை விற்கப்பட்டு வந்தது. இந்நிலையில் திங்கள் கிழமை, தக்காளி விலை கடுமையாக உயர்ந்தது. கிலோ ஒன்று ரூ. 50-லிருந்து ரூ. 55 வரை விற்பனை

செய்யப்பட்டது. சந்தைக்கு தக்காளி வரத்து மிகக் குறைவாகவும், தேவை அதிகமாகவும் இருந்த காரணத்தால் விலை உயர்ந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**காங்கயத்தில் வேளாண் கருத்தரங்கம்**

First Published : 28 Dec 2010 10:57:29 AM IST

தாராபுரம், டிச. 27: காங்கயம் அருகே சிவன்மலை ஜேஸீஸ் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் வேளாண் கருத்தரங்கம் நடைபெற்றது.

கோவையில் அண்மையில் நடைபெற்ற மாநில அளவிலான குழந்தைகள் அறிவியல் மாநாட்டில், ஜேஸீஸ் பள்ளி மாணவர்கள் சமர்ப்பித்த காங்கயம் பகுதியில் மண்வளம் குறைவதற்கான காரணங்களும், அவற்றை மேம்படுத்தலும் என்ற தலைப்பிலான ஆய்வறிக்கை, தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டுக்குத் தேர்வு செய்யப்பட்டது.

இதையொட்டி, காங்கயம் பகுதியில் உள்ள விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நிலவளம் என்ற தலைப்பில் வேளாண்மைக் கருத்தரங்கம் பள்ளி வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பள்ளித் தலைவர் ஜி.ராமசாமி தலைமை வகித்தார். தாளாளர் சி.பழனிசாமி முன்னிலை வகித்தார். முதல்வர் பி.சாவித்ரி சுப்பிரமணியம் வரவேற்றார்.

இதில், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராம.சுப்பிரமணியம், மண்வளம் குறைவதற்கான காரணங்களும், அவற்றை மேம்படுத்தலும் என்ற தலைப்பிலும், காங்கயம் வேளாண் அலுவலர் ஆர்.சுசீலா, இயற்கை வேளாண்மை மற்றும் மண்வளப் பாதுகாப்பு என்ற தலைப்பிலும், இயற்கை விவசாயி எம்.பாலசுப்பிரமணியம், இயற்கை வேளாண்ஹமையும் அதன் பயன்களும் என்ற தலைப்பிலும் பேசினர்.

மேலும், படியூர் பாசன விவசாய சங்க முன்னாள் தலைவர் சோமசுந்தரம், ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி பேராசிரியை அனுராதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் இ.சின்னதுரை நன்றி கூறினார்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 28 Dec 2010 11:41:18 AM IST

காரியாபட்டி, டிச. 27: மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் காரியாபட்டி தாலுகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை மாவட்டத் தலைவர் குருசாமி துவக்கி வைத்தார்.

தாலுகாச் செயலாளர் அம்மாசி, பொருளாளர் முத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோஷமிட்டனர். பின்னர் கோரிக்கைகள் அடங்கிய மனுவை தாலுகா அலுவலகத்தில் விவசாயிகள் சங்கத்தினர் அளித்தனர்.

**"தென்னை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்'**

First Published : 28 Dec 2010 02:01:19 PM IST

கரூர், டிச. 27: தென்னை விவசாயிகளுக்கு தமிழக அரசு இலவச மின்சாரம் வழங்குகிறது என்றார் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியத் தலைவர் எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரியம், தோட்டக்கலைத் துறை சார்பில் தென்னை சாகுபடி விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி கரூர் நாரதகானசபாவில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நலவாரியத் தலைவர் எஸ். ராஜ்குமார் மன்றாடியார் தலைமை வகித்து, கலந்துரையாடலைத் தொடங்கி வைத்தார். அப்போது, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த விவசாயிகள், தங்களது சந்தேகங்களைக் கேட்டு, நிவர்த்தி பெற்றனர். சில கோரிக்கைகளையும் அவர்கள் வலியுறுத்தினர்.

இதன்படி, தோட்டக்கலைத் துறைப் பயிர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும். தென்னை மரத்திற்கு காப்பீடு செய்யும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கக் கருத்தரங்கம் நடத்த வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் தரமான புதிய ரகத் தென்னங் கன்றுகள் கிடைப்பதில்லை. தென்னையில் ஊடுபயிர் செய்யும் பயிர்களுக்கும் மானியம் வேண்டும். தென்னையைத் தாக்கும் தஞ்சை வாடல் நோயைக் கட்டுப்படுத்த மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையும், 70 தென்னை மரங்களுக்கும் குறைவாக வைத்திருக்கும் விவசாயிகளையும் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர்க்க வேண்டுமென்றும் கோரிக்கை விடப்பட்டது.

இதுகுறித்து எஸ். ராஜ்குமார்மன்றாடியார் கூறியது:

செப்டம்பர் மாதம் தென்னை விவசாயிகள் நலவாரியம் உருவாக்கப்பட்டது. கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம் மாவட்டங்களைத் தொடர்ந்து 5-வது மாவட்டமாக கரூர், குளித்தலை பகுதியில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

செவ்வாய்கிழமை தஞ்சாவூர், பேராவூரணி பகுதிகளில் கலந்துரையாடல் நடைபெறுகிறது.

மரம் ஏறி இறங்க தற்போது ஆள் கிடைப்பதில்லை என்பதால், இதற்காக ஹைட்ராலிக் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரூ. 16 லட்சம் விலை கொண்ட இந்த இயந்திரத்தை ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வகையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தென்னை மரம் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கும் தமிழக அரசு இலவச மின்சாரம் வழங்கி வருகிறது. தென்னை நாற்றங்கால் ஏற்படுத்த கரூர் மாவட்டத்தில் இனுங்கூரிலுள்ள விதைப்பண்ணையில் தோட்டக்கலைத் துறைக்கு 60 ஏக்கர் இடம் கேட்டுள்ளோம். கிடைத்தவுடன் அங்கு தென்னங்கன்றுகள் உருவாக்கப்படும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், வேளாண் இணை இயக்குநர் கி. ஜெகதீசன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வே. கந்தசாமி, தோட்டக்கலை துணை இயக்குநர் ரா. கந்தசாமி, நலவாரிய உறுப்பினர்கள் ராஜு, கந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கரும்பு விவசாயிகளுக்கு ரூ. 1.50 கோடி பட்டுவாடா**

First Published : 28 Dec 2010 11:40:18 AM IST

மதுரை, டிச.27: மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகள் 176 பேருக்கு, கரும்புக்குரிய கிரயத் தொகை ரூ.1.50 கோடியை மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ் திங்கள்கிழமை வழங்கினார்.

அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆட்சியர் சி.காமராஜ் பேசியது:

அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2010-2011-ம் ஆண்டுக்கான அரவை பருவம் கடந்த 16-ம் தேதி துவங்கப்பட்டது. நடப்பு அரவைப் பருவத்தில் 1.40 லட்சம் டன் கரும்பு அரவை செய்திட இலங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆலை துவக்கப்பட்ட 16-ம் தேதி முதல் 26.12.2010 வரை மொத்தம் 13,422 டன் கரும்பினை 8.18 சதம் சர்க்கரை கட்டுமானத்தில் அரவை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 7,430 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலையில் பதிவு செய்யப்பட்டு, ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகள் 176 பேர், இதுவரை 7,921 டன் கரும்பினை ஆலையின் அரவைக்கு அனுப்பியிருந்தனர்.

கரும்பு வழங்கிய 176 விவசாயிகளுக்கு ஒரு வாரகாலத்துக்குள் அனுப்பிய கரும்புக்குரிய கிரயத் தொகை முழுவதும் ஒரே தவணையில் டன் ஒன்றுக்கு ரூ.1,900 வீதம் ரூ..1.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கரும்பு விவசாயிகள் தாங்கள் அனுப்பிய கரும்புக்குரிய வாகன வாடகை முழுவதையும் ஆலையே ஏற்றுக்கொண்டுள்ளது. கரும்பு விவசாயிகளின் கஷ்டங்களை தீர்க்கும் வகையில், இதுபோல் கரும்புக்கான கிரயத்தொகை ஒரே தவணையில் வழங்கப்படும்.

23.12.2010 முதல் 29.12.2010-க்கான கரும்பு கிரயத் தொகை பட்டுவாடா டிச.30-ம் தேதி நடைபெறும்.

இந்த சர்க்கரை ஆலையின் எல்லைக்குள் கரும்பு பயிர் செய்து ஆலைக்கு பதிவு செய்யாத, அனைத்து கரும்பு விவசாயிகளும் தங்களது கரும்பினை இந்த ஆலைக்குப் பதிவு செய்து ஆலையின் அரவைக்கு அனுப்பிவைத்துப் பயனடைய வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் சோழவந்தான் எம்எல்ஏ பி.மூர்த்தி முன்னிலை வகித்தார்.

ஆலை தனி அலுவலர் நந்தகோபால், ஆலையின் தொழிற்சங்க நிர்வாகிகள், கரும்பு விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தல்: அனைத்துத் தொழிற்சங்கம் சார்பில் நிர்வாகிகள் சிலர் ஆட்சியர் சி.காமராஜை சந்தித்தனர். அப்போது, தமிழகம் முழுவதும் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. ஆனால், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலன் கருதி அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் மட்டும் இப்போராட்டத்தில் பங்கேற்கவில்லை.

எனவே, அலங்காநல்லூர் ஆலைத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுதொடர்பாக 48 நபர்கள் மட்டும் நீதிமன்றத்தை அணுகினர்.

அவர்களுக்கு நிலுவைத் தொகை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

அப்போது, இதுதொடர்பாக அதிகாரிகளிடம் ஆலோசித்து நல்ல முடிவு மேற்கொள்ளப்படும் என ஆட்சியர் சி.காமராஜ் தெரிவித்தார்.

தினமலர்

**மானியத்தில் வாழைக்கன்றுகள்விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:18 IST

சிவகிரி:வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் தேவியாறு உபநில பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் திசு வாழைக் கன்றுகள், மிளகாய், காய்கறிகள், சம்மங்கி மலருக்கான விதை, கிழங்குகள் முழு மானியத்தில் வினியோகம் செய்யப்படவுள்ளன.

வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் தேவியாறு உப வடிநிலப்பகுதியில் சிவகிரி, தேவிபட்டணம், விஸ்வநாதப்பேரி, சத்திரம், இனாம்கோவில்பட்டி, தென்மலை, சுப்பிரமணியாபுரம் மற்றும் உள்ளார் பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு வரும் தைப்பட்டத்தில் நடவு செய்வதற்கு வசதியாக தோட்டக்கலை துறையில் திசு வாழைக் கன்றுகள் சுமார் 30 எக்டேர் பரப்பில் இலவசமாக வினியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தேவியாறு உபவடிநில பகுதி விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி திசு வாழை கன்றுகள் நடவு செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம்.இதுகுறித்த விபரங்களுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை நேரடையாகவோ அல்லது 94431-58543 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு கூடுதல் விபரம் பெறலாம்.

**கடல்வாழ் உயிரின விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:12 IST

தூத்துக்குடி : தமிழ்நாடு அரசு வனத்துறை சார்பில் நடந்த கடல்வாழ் உயிரின விழிப்புணர்வு முகாமில் தூத்துக்குடி சாந்தி மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். கடல்வாழ் உயிரினங்களின் வகைகள் அதனை பாதுகாப்பது பற்றிய முக்கியமான விபரங்களை, வான்தீவிற்கு மாணவ, மாணவிகளை அழைத்துச் சென்று நேரடியாக விளக்கிக் கூறினர். பவளப்பாறைகள் மற்றும் சிப்பியின் வகைகள் பற்றியும், தீவினை பாதுகாப்பது குறித்தும் வனச்சரகர் பிச்சையா, வனகாப்பாளர் காளிதாஸ் ஆகியோர் விளக்கமளித்தனர். முகாமில் பள்ளி

ஆசிரியைகள் உதயம்மாள், சுகந்தி, வீரலெட்சுமி, ஜெயலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை பள்ளி முதல்வர் ஜெயா சண்முகம் செய்திருந்தார்.

**குவிண்டால் நெல்லுக்கு ரூ.150 ஊக்கத்தொகை வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:46 IST

திருத்துறைப்பூண்டி: "விவசாயிகளுக்கு நெல் குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக 150 ரூபாய் மாநில அரசு வழங்க வேண்டும்' என எம்.எல்.ஏ., உலகநாதன் முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். தமிழக முதல்வருக்கு அவர் அனுப்பிய மனு: டெல்டா மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்யாமலும், மேட்டூர் அணை ஜூன் 12ல் திறக்கப்படாமல் ஜூலை 28ல் காலம் கடந்து திறக்கப்பட்டது. காலம் கடந்த நேரடி விதைப்பிலும், சம்பா நடவுப்பணியிலும் ஈடுபட்ட விவசாயிகள் தண்ணீர் இன்றி கடும் சிரமத்துடன் விவசாயத்தை மேற்கொண்டனர். நவம்பர் மாதத்தில் பெய்த தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பெருமளவில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லாம் இழந்த நிலையில் உள்ள விவசாயிகளை காத்திடவும், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் தமிழக அரசு நெல் விலையை உயர்த்தி அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் 2009 - 10ம் ஆண்டு சன்னரக நெல் குவிண்டால் ஆயிரத்து 100க்கும், பொதுரக நெல் ஆயிரத்து 50க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டில் நெல் கொள்முதல் துவங்குகிறது. டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி நடப்பு கொள்முதல் பருவத்தில் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசின் விலையான சன்னரகம் ஆயிரத்து 100க்கும், பொது ரகம் ஆயிரத்து 50 வழங்குவதுடன், மாநில அரசு ஊக்கத்தொகையாக குவிண்டாலுக்கு 150 ரூபாய் வழங்க வேண்டும். மழை மற்றும் பனிக்காலத்தில் அறுவடை துவங்குவதால் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு 22 சதவீதம் வரை ஈரப்பதம் வைத்து கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வரத்து சரிவால் அரை சதம் போட்டது தக்காளி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,01:15 IST

சேலம்: சேலத்தில் தக்காளி பழம் சீஸன் முடிவுக்கு வருவதால், வரத்து குறைந்து விலையில் வரலாறு காணாத உயர்வு ஏற்பட்டுள்ளது. நேற்று உழவர் சந்தைகளில் தக்காளி பழம் கிலோ 45 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில் கிலோ 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. சேலத்திற்கு தர்மபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, கவேரிப்பட்டிணம் ஆகிய இடங்களில் இருந்து தினசரி பத்து வேன்களின் தக்காளி பழம் விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது. மேலும் சேலம் மாவட்டத்தின் வாழப்பாடி, ஓமலூர், பணமரத்துப்பட்டி, அயோத்தியாபட்டணம், மல்லூர்,

மேச்சேரி, மேட்டூர், ஆத்தூர், தலைவாசல் பகுதிகளில் இருந்து தினசரி பஸ்கள், வேன்களில் சேலத்திற்கு விற்பனைக்கு வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் துவங்கிய தக்காளி பழத்தின் சீஸன் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் இருந்து தினசரி பத்து வேன்களில் வந்து கொண்டு இருந்த தக்காளி பழத்தின் வரத்து, தற்போது பாதியாக குறைந்து நான்கு வேன்களில் மட்டுமே வருகிறது. இதே போன்று சேலம் மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் இருந்து வந்து கொண்டு இருந்த தக்காளி பழத்தின் வரத்தும் பாதியாக குறைந்து விட்டது. கடந்த வாரம் வ.உ.சி., மார்க்கெட், பால்மார்க்கெட், காய்கறி மார்க்கெட், தள்ளுவண்டியில் கிலோ 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி பழத்தின் விலை வரத்து குறைவால் நேற்று கிலோ அதிகபட்சமாக 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இதே போன்று சேலத்தில் உள்ள உழவர் சந்தைகளில் கிலோ 18 ரூபாய்க்கு விற்ற தக்காளி பழத்தின் விலை நேற்று கிலோ 40, 45 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தக்காளி பழத்தின் சீஸன் தற்போது முடிவுக்கு வந்துள்ளதால் தர்மபுரி மாவட்டம், சேலத்தின் புறநகரில் இருந்து விற்பனைக்கு வரும் தக்காளி பழத்தின் அளவு மேலும் குறையும் என தெரிகிறது. இதனால் தக்காளி பழத்தின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே இருக்கும் என்று வியாபாரிகள் தெரித்துள்ளனர். இது குறித்து பால்மார்க்கெட் தக்காளி பழ வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: நாட்டு தக்காளி பழத்தின் வரத்து குறைந்துள்ள நிலையில் பெங்களூர் தக்காளி பழத்திற்கு மவுசு அதிகரித்துள்ளது. பெங்களூர் மற்றும் ஒசூர் பகுதியில் இருந்து சேலத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த தக்காளி பழங்களை சூப்பர் மார்க்கெட்டில் கொடி கட்டி பறக்கும் நிறுவனங்கள் அதிக விலை கொடுத்து சென்னைக்கு வாங்கிச் செல்கின்றன. இன்னும் சில தினங்களில் தக்காளி பழத்தின் வரத்து மேலும் குறையும். இதனால் தக்காளி பழத்தின் விலையில் மேலும் உயர்வு ஏற்படும், என்றார்.

**வெங்காயத்துக்கு பதில் முட்டைகோஸ் ஆம்லெட்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:49 IST

ஈரோடு: பெரிய வெங்காயம் விலை அதிகரித்து விட்டதால், ஹோட்டல்களில் வழங்கப்படும் ஆம்லெட்களில் வெங்காயத்துக்கு பதில் முட்டைகோஸ் பயன்படுத்துகின்றனர். சமீபத்தில் பெரிய வெங்காயம் விலை விண்ணை தொடும் அளவுக்கு சென்றது. ஒரு கிலோ 100 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்டதால், ஹோட்டல்களில் பெரிய வெங்காயத்துக்கு பதில் முட்டைகோஸ் போடப்பட்ட ஆம்லெட் வழங்கப்படுகிறது. நடுத்தரமான ஹோட்டல்களில் ஆம்லெட் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ஏழு ரூபாய் முதல் ஒன்பது ரூபாய் வரை கட்டணம் வாங்குகின்றனர். வெங்காயத்துக்கு பதில்

முட்டைகோஸ் பயன்படுத்திய ஆம்லெட் அதே விலைக்கு கொடுக்கின்றனர். முட்டை கோஸ் ஆம்லெட் ருசியும் ஏறத்தாழ, வெங்காயம் போட்டப்பட்ட ஆம்லெட் போல் ஒத்துபோவதால், ஆம்லெட் பிரியர்கள் ருசிக்க பழகி விட்டனர்.

**ஒரு கிலோ வெங்காய விதை ரூ.1,000**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,22:47 IST

பொங்கலூர்: ஒரு கிலோ வெங்காய விதை ரூ.1,000 என விற்கப்படுகிறது; இது, விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது. சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைப்பதாலும், மழை மற்றும் பி.ஏ.பி., தண்ணீர் வரத்து காரணமாக, கிணறுகளில் தண்ணீர் நிரம்பியுள்ளதாலும், பொங்கலூர் பகுதி விவசாயிகள் சின்ன வெங்காயம் நடவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். கொடுவாய், அவினாசிபாளையம், அலகுமலை, உகாயனூர், தொங்குட்டிபாளையம், கண்டியன்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் நடவு பணிகள் தீவிரம் அடைந்துள்ளன.

பல விவசாயிகள், சின்ன வெங்காயம் நடவு செய்ய ஆரம்பித்துள்ளதால், விதை வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விதை வெங்காயத்துக்கு பற்றாக்குறை நிலவுவதாலும், விலை உச்சத்தில் இருப்பதாலும், விவசாயிகள் கடைகளில் விதையை வாங்கி நாற்று விட்டு, நடவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். விவசாயிகள் விதை வாங்க ஆரம்பித்துள்ளதால், வெங்காய விதைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. சில வர்த்தகர்கள், விதைக்கு "டிமாண்ட்' ஏற்படுத்தி கூடுதல் விலைக்கு விற்கின்றனர். ஒரு கிலோ வெங்காய விதை 1,000 ரூபாயை தாண்டி விற்கப்படுகிறது. வெங்காய விதை விலையேற்றம், விவசாயிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

விலையேற்றம் காரணமாக, சில விவசாயிகள் வெங்காயம் நடவு செய்வதை தள்ளி வைத்துள்ளனர். வெங்காய விதை விலையை கட்டுப்படுத்தக்கோரி, விவசாய அமைப்புகள் போராட்டம் நடத்துவதாக அறிவிக்கும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்துள்ளது. மழை காலம் முடிவுறும் டிச., மாதம் வெங்காய நடவு சீசனாகும். இந்த சீசனில், மழையால் வெங்காய விளைச்சல் இழப்பு, நடவு சீசன் ஆரம்பிப்பதால், விதைக்காக விவசாயிகள் கொள்முதல் செய்வது போன்ற காரணங்களால், ஒவ்வொரு ஆண்டும் வெங்காய விலையேற்றம் தவிர்க்க முடியாததாக உள்ளது. அரசு முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டு, தேவையான அளவு வெங்காய விதையை இருப்பு வைத்திருந்தால், வெங்காய விதையின் விலையேற்றத்தை தவிர்த்திருக்கலாம் என்பது விவசாயிகளின் குமுறலாக உள்ளது. விதை பதுக்கலை கண்டறிந்து, தட்டுப்பாடில்லாமல் நியாயமான விலையில் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ரேஷன் கடைகளில் கிலோ ரூ.54க்குவெங்காயம் விற்பனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,23:38 IST

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலம், வெங்காயம், ஒரு கிலோ 54 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என, திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் பாரதி தெரிவித்தார்.தொடர் மழை காரணமாக, உற்பத்தி பாதிக்கப்பட்ட வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த, தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலம், வெங்காயம் ஒரு கிலோ 54 ரூபாய்க்கு விற்க முடிவு செய்யப்பட்டது.தொடர்ந்து, மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பண்டக சாலைகள், மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு நியாய விலைக் கடைகள் ஆகியவற்றில் வெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள் இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு பயன் அடையலாம்.இவ்வாறு, திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஆ.பாரதி தெரிவித்தார்.

**மானிய விலையில் சர்க்கரை விவசாயிகள் குவிந்தனர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,21:49 IST

நெல்லிக்குப்பம் : நெல்லிக்குப்பத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் ஆலை நிர்வாகம் வழங்கும் சர்க்கரையை வாங்க விவசாயிகள் கூட்டம் அலைமோதியது. நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் ஒரு டன் கரும்பு சப்ளை செய்தால் மானிய விலையில் அரை கிலோ சர்க்கரையை ஆலை நிர்வாகம் வழங்குகிறது. கடந்த ஆண்டு ரேஷன் கடை விலையான ஒரு கிலோ சர்க்கரை 13.75க்கு ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு வழங்கியது. நடப்பு ஆண்டு மத்திய அரசு சர்க்கரை கொள்முதல் விலையை 18 ரூபாயாக உயர்த்தியது. ஆனால் ரேஷன் கடையில் பழைய விலையான 13.75க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆலை நிர்வாகம் நடப்பு ஆண்டு விவசாயிகளுக்கு ரேஷன் கடை விலைக்கு வழங்காமல் மத்திய அரசு கொள்முதல் விலையான 18 மற்றும் போக்குவரத்து செலவு சேர்த்து 19.20க்கு வழங்குகிறது. இரண்டு மாதங்களுக்கு முன் வெளிமார்க்கெட் விலை 25க்கு விற்பனையானதால் விவசாயிகள் ஆலை வழங்கிய சர்க்கரை வாங்க ஆர்வம் காட்டாமல் இருந்தனர். தற்போது வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ சர்க்கரை 30 முதல் 35 வரை விற்பதால் ஆலை மூலம் வழங்கப்படும் சர்க்கரையை வாங்க விவசாயிகள் தினமும் குவிகின்றனர்.

**முளைப்புத்திறனை சோதனை செய்து விதைக்க வேளாண் அலுவலர் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,21:39 IST

கடலூர் : விதைகளின் முளைப்புத் திறனை முன்கூட்டியே அறிந்து விதைப்பு செய்ய வேளாண் அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்த விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் நடனசபாபதி விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மார்கழி மற்றும் தைப்பட்டத்தில் விதைப்பதற்காக சேமித்து வைத்திருக்கும் மணிலா, உளுந்து, பாசிப்பயறு விதைகளின் முளைப்புத் திறனை முன் கூட்டியே அறிந்து விதைப்பு மேற்கொள்ளலாம். முளைப்புத் திறனை முன்கூட்டியே அறிய விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைக்கு வயலில் இருந்து 100 கிராம் விதை மாதிரியை எடுத்து கடலூரில் புதியதாக இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்திற்கு நேரில் கொண்டு வந்து கொடுத்து அறிந்து கொள்ளலாம். விதையின் முளைப்புத் திறனை முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலம் விதையின் அளவை முளைப்புத் திறனைக் கொண்டு சரியாக கணக்கிட்டு பயன்படுத்த ஏதுவாகிறது. ஒரு மாதிரியின் விதை பரிசோதனைக் கட்டணம் 30 செலுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மீன் வளர்ப்போருக்கு மானியத் தொகை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,21:33 IST

கடலூர் : குளம் அமைத்து மீன் வளர்ப்பவர்களுக்கு கலெக்டர் மானிய உதவி வழங்கினார். கடலூர் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை தலைவராக கலெக்டர் சீத்தாராமன் உள்ளார். கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களை ஆட்சி எல்லையாகக் கொண்டு இயங்கி வரும் இம்முகமை மூலம் உள்நாட்டு மீன் வளத்தினை முன்னேற்றிட மத்திய அரசு நிதியுதவியுடன் மீன் வளம் சார்ந்த பல்வேறு திட்டங்களை தமிழக அரசு மானியம் வழங்கி செயல்படுத்தி வருகிறது. அவற்றில் 2009 - 10ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில், சொந்த நிலத்தில் குளம் அமைத்து மீன்வளர்ப்போருக்கு மானியம் வழங்கும் திட்டத்தில் ஏற்கனவே விண்ணப்பித்திருந்த தகுதியுள்ள 21 பயனாளிகளுக்கு, ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்கி வருகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒரு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்குகிறது. இதற்கான மானியத் தொகையை காசோலைகள் மூலம் கலெக்டர் சீத்தாராமன் முகாம் அலுவலகத்தில் வழங்கினார்.

**தமிழகம், கேரளாவில்முட்டை விலை 275 காசு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,03:11 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 275 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயர்வதால் கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 269 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை 6 காசுகள் உயர்த்தி 275 காசாக நிர்ணயிக்கப்பட்டது. முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்:ஹைதராபாத் 274 காசு, விஜயவாடா, தனுகு 278 காசு, சென்னை 272 காசு, மைசூரு 263 காசு, பெங்களூரு 263 காசு, மும்பை 299 காசு, டில்லி 317 காசு, பர்வாலா 307 காசு, கோல்கத்தா 322 காசு.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 1 ரூபாய் குறைத்து 32 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கறிக்கோழி விலை 52 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**விவசாய பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,23:26 IST

வடமதுரை : இந்திய ரிசர்வ் பாங்க் சென்னை கிளையின் மக்கள் அனைவருக்கும் வங்கி சேவை திட்டத்தின் கீழ் வடமதுரை ஒன்றியத்தில் வெள்ளபொம்மன்பட்டி, சீலப்பாடி கிராமங்கள் தேர்தெடுக்கப்பட்டு வங்கி சேவை அறிமுகம் செய்யும் பணி நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக வெள்ளபொம்மன்பட்டி செரு வளாகத்தில் நபார்டு வங்கி மற்றும் கனரா பாங்க் இணைந்து இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி முகாம் நடத்தின. ரிசர்வ் பாங்க் கிளை துணை பொது மேலாளர் செல்வராஜ் தலைமை வகித்தார். உதவி பொது மேலாளர் ஜார்ஜ், கனரா பாங்க் மேலா ளர்கள் செல்வராஜன், அர்ஜூன் முத்தையா முன்னிலை வகித்தனர். செரு இயக்குனர் வெள்ளைச்சாமி வரவேற்றார். விவசாயிகள், சுய உதவிக்குழுவினர் பங்கேற்றனர்.

**பருத்தி அறுவடை செய்வது எப்படி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,23:02 IST

மதுரை : பருத்தியை அறுவடை செய்வது குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ள வேண்டும் என விவசாய அலுவலர் காதிரி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: பருத்திக்கு அதிக விலை பெறுவது என்பது அதன் சுத்தம், நிறம், மென்மை தன்மை, குறைவான ஈரம் ஆகியவற்றை பொறுத்தே இருக்கும்.இந்த நான்கு தன்மைகளையும் பெற்றிட, விவசாயிகள்

அறுவடை பின்செய் நேர்த்தி முறைகளை பின்பற்ற வேண்டும். வெடித்து நன்கு மலர்ந்த பருத்தியை மட்டுமே செடியில் இருந்து எடுக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒருமுறை பருத்தியை சேகரிக்க வேண்டும். பருத்தியை காலை நேரங்களில் சேகரிப்பது சிறந்தது. அப்போதுதான் காய்ந்த இலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது. சேகரித்த பருத்தியை நிழலில் மணல் பரப்பிய களங்களில் காயப் போட வேண்டும். நேரடி வெயிலில் பருத்தியை உலரப் போட்டால், பஞ்சின் நிறம் குறைந்துவிடுவதுடன் மென்மை தன்மை பாதிக்கும்.

பருத்தியை நன்கு உலர்த்திய பின், அதில் கலந்துள்ள இலைச் சருகுகள், காய்ந்த சப்பை துண்டுகள், பூச்சி நோய் தாக்கியது மற்றும் வீணாகிய பருத்திகளை தனியாக பிரிக்க வேண்டும். பருத்தியை காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில், ரகம் வாரியாக தனித்தனியாக சேமிக்க வேண்டும்,என கூறியுள்ளார்.

**கனகாம்பரம் கிலோ ரூ.1000**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,23:20 IST

விருதுநகர் : பண்டிகைகளையோட்டி விருதுநகரில் பூக்கள், காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.பூக்கள்: கிலோ கனகாம்பரம் 1,000 ரூபாய், மல்லிகை, முல்லை தலா 800,பிச்சிப்பூ 400, செவ்வந்தி 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.காய்கறி: கடந்த வாரம் கிலோ 100க்கு விற்ற பட்டர்பீன்ஸ் இப்போது 120 ரூபாய், 36க்கு விற்ற தக்காளி 48, 36க்கு விற்ற கேரட் 44, 70க்கு விற்ற சோயா பீன்ஸ் 80, 50க்கு விற்ற பாகற்காய் 60 ரூபாய் எனவும், பிற காய்கறிகள் கடந்த வார விலையிலேயே உள்ளன.

**நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,23:07 IST

மானாமதுரை : மழை வெள்ளம் பாதித்த நெற்பயிர்களில் பூச்சி தாக்குதலால், நடவு செய்த பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் கண்ணீர் சிந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. சம்பா நெல் பருவ சாகுபடிக்கென வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த நீரை நம்பிய விவசாயிகள் மானாமதுரையில் நெல் நடவு பணிகள் தொடங்கின. அதற்கு பின், வடகிழக்கு பருவ மழை பெய்ததால், கண்மாய்களில் மழை நீர் பெருக்கெடுத்து, நெல்வயல்களுக்குள் புகுந்தது.பூச்சி தாக்குதல்: இதனால்,நெற்பயிரில் விளைச்சலுக்கான பால் பிடிக்கும் தருணத்தில் புகையான், குருத்துப்புழு, இலை சுருட்டு புழு, தத்துப்பூச்சிகள் தாக்கியுள்ளன. இதனால், விவசாயிகள் கண்ணீர் சிந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக முத்தனேந்தல், கட்டிகுளம், விளாக்குளம், வாகுடி, விளத்தூரில் இப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளன.இது குறித்து விளாக்குளத்தை சேர்ந்த விவசாயி பாக்கியம் கூறுகையில், ""நெல்வயல்களில் தண்டு,வெள்ளி பூச்சி தாக்கியுள்ளது. இப்பூச்சி தாக்கியதால், சாவி தான் மிஞ்சுகிறது,'' என்றார்.

**நன்செய் நிலங்களில் தொழி உழவு அவசியம் ஏன்?வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,02:28 IST

தூத்துக்குடி : நன்செய் நிலங்களில் தொழி உழவு அவசியம் குறித்து கிள்ளிகுளம் வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு யோச னை தெரிவித்துள்ளார்.தொழி உழவு ; நன்செய் நிலங்களில் நெல் பயிரிடுவதற்கு முன் நீர் பாய்ச்சி பசுந்தழை, தொழுஉரம் ஆகியன இடப்பட்டு சேறு கலந்த நிலையில் இரும்பு கலப்பை கொண்டோ மரக்கலப்பை கொண்டோ அல்லது தொழி கலக்கும் கலப் பை கொண்டோ நன்கு மடக்கி உழுதல், தொழிஉழவு செய்தல் எனப்படும்.மண்ணில் ஏற்படும் மாற்றங்கள் ; மண்ணின் கனபரிமாணம் குறைக்கப்பட்டு மண் மிருதுவாக்கப்படுகிறது. மண்கட்டிகள் (நீர் சூழ்ந்த நிலையில்) மண் துகள்களாக உடைக்கப்படுகின்றன.

தொழி உழவிற்குப்பின் காய்ந்த மண் ஈரமாக்கப்படும் போது அதனுடன் தங்கியிருக்கும் காற்று வெளியேற்றப்பட்டு மண்கட்டிகள் உடையும் தன் மை பெறுகின்றனர். தொழி உழவிற்கு சாதாரண கலப்பையை விட சுழலக்கூடிய அமைப்புள்ள உழவு கருவிகள் (ரோட்டோவேட்டர்) மிகவும் ஏற்றதாகும். நஞ்சையில் தொழி உழவு செய்யும் பொழுது அதனுடைய சேறு கலக்கும் திசை அடிக்கடி மாறுபடுவதால் மண் கட்டிகளில் ஏற்படும் நுண்ணிய கீறல்கள் தான் சிதற

வழிவகுக்கின்றது. எனினும் நாட்டுக்கலப்பை, மண்கட்டி உடைக்கும் கலப்பை போ ன்ற கருவிகளும் தொழி உழவுக்கு ஏற்றதாக இருப்பது ஒவ்வொரு மண்வகைகளின் தன்மையைப் பொறு த்தே அமைகின்றன. சுழலும் அமைப்புள்ள ஷிஃப் ட்ரோலர் தொழிஉழவுக் கருவி நஞ்சைக்கு ஏற்றதாகும். பயன்கள் தொழி உழவு செய்யப்பட்ட நன்செய்நிலத்தில் மண் மிருதுத்தன்மை பெற்று நீர் புகும் தன்மை அதிகரிக்கப்படுகிறது. நாற்று நடுதல் எளிது.

சிக்கனமுறையில் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் அளித்தல் ஏதுவாகிறது. மண்ணின் பௌதீக, ரசாயன, நுண்ணுரிய குணங்களும் மேம்படுத்தப்படுகின்றன. நெல் வயலில் களைச் செடிகள் அழிக்கப்படுவதுடன், களைச்செடி விதைகளின் முளைப்புத்திறனும் குறைக்கப்படுகிறது. தொழி உழவின் மூலம் நெற்பயிருக்கேற்ற மண்ணின் பௌதீக, ரசாயன மற்றும் நுண்ணுரிய தன்மைகள் உருவாக்கப்படுகிறது. அதனால் நெற்பயிரின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டு உயர் விளைச்சலுக்கு வழிகோலுகிறது. தொழி உழவு செய்த நிலத்தில் கீழ்நோக்கி விரயமாகும் நீர் தடுக்கப்பட்டு அளிக்கப்பட்ட ஊட்டச்சத்துக்களின் கரையும் திறன் அதிகமாகி நெற்பயிருக்கு விரைவில் கிடைக்கிறது.

இத்தகவலை கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மண் மற்றும் பயிர்கள் துறையைச் சேர்ந்த சுப்ரமண்யன், மாலதி, சுந்தர், ராஜபாண்டியன் ஆகியோரது செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**நவீனதொழில்நுட்பம் - கரும்புச்சோகை இயற்கை உரம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:00 IST



கரும்பு வயலில் அறுவடை செய்யப்படும் கரும்பின் எடையில் 10-20 சதவீதம் கரும்பு சோகை கிடைக்கும். தமிழகத்தில் ஒரு வருடத்தில் 2.4 மில்லியன் டன்கள் அளவில் கரும்பு சோகை கிடைக்கிறது. பொதுவாக 100 டன்கள் கரும்பு விளையும் நிலத்திலிருந்து குறைந்தது 10 டன்களாவது கரும்பு சோகை கிடைக்கும். 10 டன் கரும்பு சோகையை மக்கவைக்க கீழ்க்கண்ட பொருட்கள் அவசியம். கரும்பு ஆலைக்கழிவு அழுக்கு (பிரஸ் மட்) - 10 டன்கள். யூரியா-100 கிலோ, ஜிப்சம்-200 கிலோ, ராக் பாஸ்பேட்-200 கிலோ,மாட்டுச்சாணம்-500 கிலோ, மட்கிய குப்பை-500 கிலோ, மண்-500 கிலோ, தண்ணீர் - தேவையான அளவு. கரும்பு வயலில் ஒரு மூலையிலோ அல்லது உழவர்களுக்கு சவுகரியமான இடத்தையோ மண்வெட்டி கொண்டு செதுக்கி சுத்தம் செய்து 7 மீட்டர் நீளம், 3 மீட்டர் அகலம் கொண்ட பகுதிகளாக பிரித்துக் கொள்ள வேண்டும். குழிவெட்டி கம்போஸ்ட் செய்யும் முறை சிறந்த முறை என்றாலும் குழி வெட்டுவதில் சிரமம் இருப்பதாலும், செலவைக் குறைப்பதற்காகவும் குழிமுறையில் கம்போஸ்ட் செய்வது தவிர்க்கப்படுகிறது.

முதலில் 7 x 3 மீட்டர் பரப்பளவில் 15 செ.மீ. உயரத்திற்கு கரும்பு சோகையை பரப்ப வேண்டும். இதற்கு சுமாராக 100 கிலோ கரும்பு சோகை தேவைப்படும். பின் இவ்வாறு பரப்பிய கரும்பு சோகை மீது 100 கிலோ பிரஸ் மட் எனப்படும் கரும்பாலை அழுக்கை பரப்பிவிட வேண்டும். அதன்மீது ராக்பாஸ்பேட் 2 கிலோ, ஜிப்சம் 2 கிலோ, யூரியா 1 கிலோ கலந்த உரக்கலவையினைத் தூவ வேண்டும். இதன்பிறகு 5 கிலோ மண், 5 கிலோ மாட்டுச்சாணம் மற்றும் 5 கிலோ மக்கிய குப்பை ஆகிய மூன்றையும் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசலாக்கி கரும்பு சோகையும் கரும்பாலை அழுக்கும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

இவ்வாறு கரும்புசோகை, கரும்பாலை அழுக்கு, உரக்கலவை, மண், மாட்டுச்சாணம், குப்பைக்கரைசல் ஆகியவற்றை பயன்படுத்தி ஒரு மீட்டர் உயரம் வரை அடுக்கிவர வேண்டும். கடைசி அடுக்கின் மீது மண், கரும்பாலை அழுக்கு இரண்டையும் 1:1 என்ற விகிதத்தில் கலந்து 5 செ.மீ. உயரத்திற்கு இட்டு மூடிவிட்டு, குவியல் நன்கு நனையும்படி தண்ணீர் தெளித்துவர வேண்டும். குவியல் ஈரமாக இருந்தால்தான் நுண்ணுயிர்கள் பெருகி சோகை மக்குவது விரைவாகும். 3 மாதங்கள் முடிந்தவுடன் மண்வெட்டி கொண்டு குவியலை வெட்டிப்பிரித்து சோகையையும் கரும்பாலை அழுக்கையும் நன்கு கலந்து மீண்டும் குவியலாக்க வேண்டும்.

ஓரளவிற்கு மக்கி இருக்கும் சோகையை மேலும் நன்கு மக்குவதற்கு இவ்வாறு கலக்கிவிட வேண்டும். மேலும் 2 மாதங்களுக்கு வாரம் ஒரு முறை குவியல் நன்கு நனையும்படி தண்ணீர் தெளித்துவர வேண்டும். 5வது மாத இறுதியில் சோகை நன்கு மக்கி ஒரு ஊட்டமேற்றிய

கம்போஸ்ட் எருவாக மாறி இருக்கும். ஒரு எக்டர் நிலத்திலிருந்து கிடைக்கும் சோகையை கம்போஸ்ட் செய்ய மொத்தம் ரூ.2500 வரை செலவாகும். ஒரு எக்டர் நிலத்தில் இருந்து கிடைக்கும் சோகையும், கரும்பாலை அழுக்கும் சேர்ந்து குறைந்தது 10 முதல் 15 டன்கள் வரை கம்போஸ்ட் உரம் கிடைக்கும். இந்த எருவின் மதிப்பு ரூ.15,000க்கு மேல் இருக்கும். கரும்புச்சோகை கம்போஸ்ட் இடுவதன் மூலம் மண்வளம் காக்கப்படுகிறது.

பயிரின் விளைச்சல் கூடுகிறது. சுற்றுப்புற சூழல் பாதுகாக்கப்படுகிறது. பொதுவாக ஒரு எக்டர் நிலத்திலிருந்து கிடைக்கும் கரும்புச்சோகையில் இருந்து தயாரிக்கப்படும் கம்போஸ்ட் உரம் ஒரு எக்டர் மறுதாம்பு கரும்பு பயிருக்கு போதுமானதாகும். இந்த கரும்பு சோகை, கம்போஸ்ட்டை பயன்படுத்தும்போது சுண்ணாம்பு, மக்னீசியம், கந்தகம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களான இரும்பு, மாங்கனீசு, துத்தநாகம், தாமிரம், போரான், மாலிப்டினம் போன்றவை பயிருக்கு இடவேண்டிய அவசியமிருக்கிறது.(தகவல்: முனைவர் ரா.ஷீபா ஜாஸ்மின், அ.திருமுருகன், ரா.சீ.புரு÷ஷாத்தமன், கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாத்தூர்-635 806)

**வணிக ரீதியில் இளம்புழு வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:00 IST



பட்டுப்புழு வளர்ப்பில் அதிக லாபம் பெற இளம்புழு வளர்ப்பை வணிகரீதியில் கையாளும் நடைமுறை உதவுகிறது. பட்டுக்கூடு அறுவடை வெற்றிகரமானதாக அமைவதற்கு ஆரோக்கியமான மற்றும் திடகாத்திரமான இளம்புழுக்களே முக்கிய காரணங்களாக கருதப்படுகிறது. சரியான முறையில் அட்டை அடைகாப்பு, புழு வளர்ப்பு மனை மற்றும் சுற்றுப்புறங்களை கிருமிநீக்கம் செய்தல், இணக்கமான சுற்றுச்சூழல் மற்றும் சத்தான இலைகள்

ஆகியவை ஆரோக்கியமான இளம்புழு வளர்ப்புக்கு அடிப்படைக் காரணிகளாகும். இளம்புழு வளர்ப்பு மையங்களில் விஞ்ஞான ரீதியில் இளம்புழுக்கள் வளர்க்கப்படுவதால், பட்டு விவசாயிகளுக்கு நல்ல அறுவடையைத் தரக்கூடிய ஆரோக்கியமான மற்றும் வலிமையான புழுக்களை வினியோகம் செய்ய முடிகிறது. மாதிரி இளம்புழு வளர்ப்பு மையம்: பட்டுக்கூடு விளைச்சலின் வெற்றி இளம்புழு வளர்ப்பில் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படுகிறது.

அதனால் இளம்புழு வளர்ப்பை பிரத்யேக புழு வளர்ப்பு மனையில் உகந்த சூழ்நிலையில் ஊட்டச்சத்து மிக்க மல்பெரி இலைகளை அளித்து திறமையான வேலை ஆட்களைக் கொண்டு செய்ய வேண்டும். விஞ்ஞான முறையில் இளம்புழு வளர்ப்பதால் கிடைக்கும் ஆரோக்கியமான இளம்புழுக்கள் பிறகு நல்ல கூடு விளைச்சலுக்கு வழிவகுக்கும். வாணிப இளம்புழு வளர்ப்பு மையங்கள் ஆரோக்கியமான இளம்புழுக்களை விவசாயிகளுக்கு வினியோகிக்கின்றன.
மாதிரி வாணிப இளம்புழு வளர்ப்பு மையத்திற்கு பிரத்யேக சாக்கி மல்பெரி தோட்டம், இளம்புழு வளர்ப்பு மனை மற்றும் புழு வளர்ப்பு உபகரணங்கள் தேவை. புழு வளர்ப்பில் அனுபவம் உடைய திறமையான வேலையாட்கள் தேவை.
இத்தகைய புழு வளர்ப்பு மையத்திலிருந்து புழுக்களை வாங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக கூடு மகசூலும், ஆதாயமும் கிட்டுகிறது. இளம்புழுக்களை வாங்கி முதிர்புழு வளர்ப்பு மட்டும் மேற்கொள்வதால் விவசாயிகளுக்கு 8 முதல் 10 நாட்கள் வேலை நேரம் மற்றும் பணம் மிச்சம் ஆகிறது. இதனால் உற்பத்தி செலவும் குறைகிறது. வெற்றிகரமான இளம்புழு வளர்ப்புக்கு, பட்டு முட்டைகளை முட்டை வித்தகத்திலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும். மேலும் 120 முதல் 150 ஏக்கர் மல்பெரி தோட்டமும் 80-100 பட்டு விவசாயிகளும் இளம்புழு வளர்ப்பு மையத்தைச் சுற்றிலும் இருப்பது மிகவும் அவசியம்.

**மாதிரி இளம்புழு வளர்ப்பு மனை:** இளம்புழு வளர்ப்பு மனையை, முதிர்புழு வளர்ப்பு மனை மற்றும் கூடு கட்டவிடும் அறையிலிருந்து தூரமாக கட்டவேண்டும். ஜன்னல் மற்றும் வென்டி லேட்டர்கள் அதிகம் இருக்கக்கூடாது. அப்போதுதான் புழு வளர்ப்பு மனையின் உள்ளே தேவையான சூழ்நிலையைப் பராமரிக்க முடியும். அறையின் உட்புறச் சுவரைச் சுற்றிலும் சிறிய கால்வாய் இருக்க வேண்டும். இது எறும்புகள் தாங்கியில் ஏறாமல் தடுப்பதோடு, அறை மற்றும் தளவாடங்களை கழுவும்போது நீரை வெளி யேற்ற உதவுகிறது. அறையின் தரை, உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களுக்கும் சிமெண்ட் பூசவேண்டும். மாதிரி இளம்புழு வளர்ப்பு மையத்தில் மூன்று அறைகள் முறையே முக்கிய புழு வளர்ப்பு அறை, இலை பாதுகாப்பு அறை மற்றும் தடுப்பு அறை இருக்க வேண்டும். தடுப்பு அறை ஊசி ஈ நுழைவதை தடுப்பதுடன், புழு வளர்ப்பிற்கு தேவையான பொருட்களை சேமித்து வைக்கவும் பயன்படுகிறது. மனையின் மூன்று புறமும் தாழ்வாரம் கட்டப்பட வேண்டும். ஊசி ஈ நுழைவதைத் தடுக்க கதவு மற்றும் ஜன்னல்களுக்கு கம்பிவலை

பொருத்த வேண்டும். தொடர்பு: நா.தாஹிரா பீவி, விஞ்ஞானி-சி, ஆராய்ச்சி விரிவாக்க மையம், கோபி. 04285-228 171. -கே.சத்தியபிரபா, உடுமலை.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:00 IST

மாந்தோப்பில் களைக்கட்டுப்பாடு - அடர்நடவு முறையில் நடப்பட்ட மாந்தோப்பில் ஆட்களை / கருவிகளைக்கொண்டு மண்ணின் மேல்பகுதிகளை உழுது அல்லது ரசாயனக் களைக்கொல்லிகளைக் கொண்டு என மூன்று வழிகளில் களைகளைக் கட்டுப்படுத்தலாம். கருவிகளைக் கொண்டு உழும்போது எடை குறைவான பவர்டில்லர் அல்லது மினி டிராக்டரைக் கொண்டு உழுது களையைக் கட்டுப்படுத்துவது அவசியம். இல்லையெனில் மண் இறுகி மண்ணின் வேர்வளர்ச்சி பாதிக்கப்படும். தவிர மாமரத்திற்கு பாரகுவாட், அட்ரவீன், கிளைபோசேட் போன்ற களைக் கொல்லிகளையும் பயன்படுத்தி களைகளைக் **கட்டுப்படுத்தலாம். நீர்வழி உரம் அளித்தல்:** நீர்வழி உரம் அளிக்கும்போது முதல் வருடம் மாஞ்செடி ஒன்றுக்கு வருடத்திற்கு 100:50:100 கிராம் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல்சத்து வாரம் ஒரு முறை பகிர்ந்து அளிக்க வேண்டும். இரண்டு வயது மரத்திற்கு 200:100:200 கிராம் அளவிலும், 3 வயது மரத்திற்கு 400:200:400 கிராம்; 5 வயது மரத்திற்கு 500:200:500 கிராம் என்ற அளவில் அளிப்பது நல்ல விளைச்சலுக்கு வழிவகுக்கும்.

**பசுமைக்குடில் தொழில்நுட்பம்:** நிலத்தில் சமமான பகுதியில் பசுமைக்குடில் அமைத்து அதில் பாகர் என்று சொல்லும் புகைமூட்டம் போன்று நீர் தெளிக்கிற அமைப்பை அமைத்துக் கொள்ள வேண்டும். பசுமைக்குடில் இருக்கும் தரைதளத்தின் மண்ணை பயன்படுத்தி 4 அடி அகலத்தில் ஒன்றரை அடி உயரத்திற்கு பாத்தி அமைக்க வேண்டும். பாத்திபோட நீளத்தை நம் குடிலின் அளவுக்கு ஏற்றவாறு கூட்டி குறைத்துக் கொள்ளலாம். பாத்தி அமைத்தபின் பிளாஸ்டிக் ஷீட்டை வைத்து அதை மூடிவிட வேண்டும். அதன் மேல்தான் நாற்று உற்பத்தி செய்யும் குழித்தட்டை வைக்க வேண்டும். ஒரு தட்டில் 98 குழிகள் இருக்கும். 100 அடி நீளத்திற்கு பாத்தி அமைத்தால் அதில் 100 தட்டுகளை வைக்க முடியும். தட்டுகளில் உள்ள குழிகளில் ஊட்டமேற்றிய தேங்காய் நாரை நிரப்ப வேண்டும். ஒரு தட்டுக்கு ஒரு கிலோ நார் தேவைப்படும். ஒவ்வொரு குழியிலும் ஒரு விதையை விதைக்க வேண்டும். தினமும் பாகர் மூலம் 10 நிமிடம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். களைகள் வந்தால் எடுக்க வேண்டும். வேறு பராமரிப்பு எதுவும் தேவைப்படாது. பசுமைக் குடிலுக்குள் ஒரே மாதிரியான வெப்பநிலை பராமரிக்கப்படுவதால் எல்லா நாற்றுகளும் ஒரே அளவில் முளைத்துவரும். பூச்சிகள், பூஞ்சாண தாக்குதல் எல்லாம் இல்லாமல் இருக்கும். தக்காளி நாற்று 22 நாளில் உற்பத்தியாகிவிடும். காலிபிளவர் நாற்று 25 நாட்களிலும், மிளகாய், பப்பாளி

நாற்றுகள் 40 நாட்களிலும் உற்பத்தியாகும். பப்பாளி நாற்றுக்கு குழித்தட்டு போதாது. அதற்கு மட்டும் பெரிய அளவில் இருக்கும் பிளாஸ்டிக் டம்ளர்களைப் பயன்படுத்தலாம். இதில் முக்கியமான தொழில்நுட்பம் நிழல்வலைப் பசுமைக் குடிலும், பாகர் அமைப்பும்தான். இதன்மூலம் எந்த நாற்றுக்களையும் உருவாக்க முடியும். இந்த குடிலுக்கு பயன்படுத்தும் வலை 3 வருடத்திற்குத்தான் தாங்கும். அதன்பின் புதியதாக மாற்றவேண்டும். 40 நாட்களுக்குள் சராசரியாக 5 லட்சம் என்னும் கணக்கில் வருடத்திற்கு 45 லட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய முடியும். ஒரு நாற்றுக்கு சராசரியாக 7 பைசா லாபம் கிடைக்கும். 17 சென்ட் நிலத்தில் வருடத்திற்கு சராசரியாக 3 லட்சம் வரை லாபம் கிடைக்கும் என்று கூறுபவர் திருப்பூர் மாவட்டம் குண்டடம் அருகேயுள்ள குங்குமபப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த வேலுச்சாமி. தொடர்புக்கு: 99439 55505 (தகவல்: பசுமை விகடன், 25.12.10) -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## *டெல்டா மாவட்டங்களில் இருந்து நெல் கொள்முதல் செய்வதற்கு ரூ.1,000 கோடி வங்கி கடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கருணாநிதி அனுமதி*

*சென்னை, டிச.29–*

*ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்திற்காக டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்ய ரூ.1,000 கோடி வங்கிக் கடன் வாங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு முதல்–அமைச்சர் கருணாநிதி அனுமதி அளித்துள்ளார்.*

*நெல் கொள்முதல் ரூ.1,000 கோடி*

*பொதுமக்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்திற்காக அரசு ஆண்டுதோறும் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் மையங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்வது வழக்கம். இதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் குறைந்த வட்டியில் குறுகிய காலக்*

கடன் கொடுக்கும் தனியார் மற்றும் அரசு வங்கிகளிடம் இருந்து கடன் பெறப்படுகிறது. இதன்படி, கடந்த 2009–2010–ம் ஆண்டு சென்டிரல் வங்கி, அலகாபாத் வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி போன்ற வங்கிகளில் ரூ.1,800 கோடி கடன் பெறப்பட்டது.

இந்த தொகையைக் கொண்டு தஞ்சாவூர், திருவாரூர், நாகை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், கடலூர் உள்பட 10 மாவட்டங்களில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு 16 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இலக்கை விஞ்சி 18 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

கருணாநிதி அனுமதி

இந்த ஆண்டு, 16 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனியார் வங்கி ஒன்றில் ரூ.500 கோடி கடன் பெற்றுள்ளது. இதுதவிர, நெல் கொள்முதலுக்காக மேலும் ரூ.1,000 கோடி கடன் வாங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு முதல்–அமைச்சர் கருணாநிதி அனுமதி அளித்துள்ளார். இந்த ஆண்டு இதுவரை 1 லட்சத்து 43 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.மேற்கண்ட தகவலை அரசு உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

## கேரள மாநிலத்தில் 2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி விண்ணப்பம் வாங்கப்படுகிறது

கொழிஞ்சாம்பாறை,டிச.29–

பாலக்காடு மாவட்டத்தில் கட்டிட நிர்மான தொழிலாளர்களுக்கு வருமானத்தின் அடிப்படையில் ஒருகிலோ ரேஷன் அரிசி ரூ.2–க்கு வழங்க கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்கான தகுதி உடையவர்களிடம் விண்ணப்பங்கள் வாங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணி வருகிற 31–ந்தேதி வரை நடக்கிறது.

## *நடப்பு 2010-11-ஆம் சர்க்கரை பருவத்தில் கரும்பு விவசாயிகளின் வருவாய் ரூ.55,000 கோடியாக அதிகரிக்கும்*



*பிரபா ஜெகநாதன்*

*புதுடெல்லி*

*நடப்பு 2010-11-ஆம் சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) கரும்பு விவசாயிகளின் வருவாய் ரூ.55,000 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற 2009-10-ஆம் பருவத்துடன் ஒப்பிடும்போது இது ரூ.9,000 கோடி அதிகமாகும். இதற்கு நாட்டில் கரும்பு அதிக அளவில் உற்பத்தியாகும் மஹாராஷ்டிரா, உத்தரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரித்ததும், விவசாயிகளுக்கு கரும்பிற்கு அதிக விலை கிடைத்ததும் முக்கிய காரணங்களாகும்.*

தேவைப்பாடு

*கரும்பு விவசாயிகள் ஈட்டிய வருவாய் கடந்த 2007-08-ஆம் பருவத்தில் ரூ.29,000 கோடியாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது நடப்பு பருவத்தில் ஈட்டப்படும் வருவாய் இரண்டு மடங்கு அதிகமாகும். ஆக மூன்று ஆண்டுகளில் வருவாய் 90 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*சென்ற 2009-10-ஆம் சர்க்கரை பருவத்தில் 27 கோடி டன் கரும்பு உற்பத்தியாகி இருந்தது. இதில் சுமார் 20 கோடி டன் கரும்பை சர்க்கரை ஆலைகள் குவிண்டால் (100 கிலோ) ஒன்றிற்கு சராசரியாக ரூ.230 என்ற விலையில் கொள்முதல் செய்தன. இதனடிப்படையில் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.46,000 கோடி வருவாய் கிடைத்தது. மேற்கண்ட சர்க்கரை பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 1.85 கோடி டன்னாக குறைந்து இருந்தது.*

*சென்ற பருவத்தில் சர்க்கரைக்கான தேவைப்பாடு 2.20 கோடி டன்னாக இருந்தது.*

ஆக, தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் உற்பத்தி இல்லாததால் சென்ற 2009–ஆம் ஆண்டில் நாட்டில் சர்க்கரை விலை மிகவும் உயர்ந்திருந்தது.

உற்பத்தி

நடப்பு 2010–11–ஆம் சர்க்கரை பருவத்தில் நாட்டில் கரும்பு உற்பத்தி 34.60 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சுமார் 25 கோடி டன் கரும்பை சர்க்கரை ஆலைகள் குவிண்டால் ஒன்றிற்கு சராசரியாக ரூ.210 என்ற விலையில் கொள்முதல் செய்ய உள்ளன. இதனடிப்படையில் கரும்பு விவசாயிகளுக்கு சுமார் ரூ.55,000 கோடி வருவாய் கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. நடப்பு சர்க்கரை பருவத்தில் 2.55 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்ற சர்க்கரை பருவத்தில் ஒரு குவிண்டால் கரும்பிற்கான மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.129.85 ஆக இருந்தது. இது நடப்பு பருவத்தில் ரூ.139–க்கு அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தியாவில் கரும்பு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள உத்தரபிரதேச மாநிலத்தில் அம்மாநில அரசின் குறைந்தபட்ச ஆதரவுவிலை குவிண்டால் ஒன்றிற்கு ரூ.40 உயர்த்தப்பட்டுள்ளது.

கொள்முதல் விலை

கரும்பு அதிக அளவில் விளையும் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் கடந்த ஆண்டுகளில் மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையைக் காட்டிலும், குறைந்த விலையில் ஆலைகள் கரும்புகளை கொள்முதல் செய்தன. இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அம்மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் ஒரு குவிண்டால் கரும்பை ரூ.210 என்ற விலையில் வாங்க முன் வந்துள்ளன.

சென்ற நான்கு ஆண்டுகளில் கடந்த 2005–06 மற்றும் 2009–10–ஆம் சர்க்கரை பருவங்களில் மட்டுமே சர்க்கரை ஆலைகள், அரசு நிர்ணயித்த விலையைக் காட்டிலும் அதிக விலை கொடுத்து கரும்பை வாங்கியுள்ளன. அப்போது உள்நாட்டில் சர்க்கரை விலை மிகவும் அதிகமாக இருந்தது.

முன்பேர சந்தை

இதுபோன்ற காரணங்களால் கரும்பிற்கான கொள்முதல் விலையை, சர்க்கரை விலையின் அடிப்படையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பஜாஜ் ந்துஸ்தான் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடப்பு சர்க்கரை பருவத்தில் தேவைப்பாட்டைக் காட்டிலும் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்திய முன்பேர சந்தைகளில் திங்கள்கிழமை முதல் சர்க்கரை மீது வர்த்தகம் மேற்கொள்ள மத்திய அரசு

*அனுமதி அளித்துள்ளது. அன்றைய தினத்தில் முன்பேர சந்தைகளில் சர்க்கரை மீதான வர்த்தகத்தில் விறுவிறுப்பு ஏற்பட்டது. என்.சி.டீ.இ.எக்ஸ் சந்தையில் சுமார் ரூ.84 கோடிக்கு சர்க்கரை மீது வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.*

*வரும் ஜனவரி மாதத்தில் 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## வேளாண் பல்கலைக்கழகத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி

*கோவை, டிச.29–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் வருகிற 6–ந் தேதி தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் தேனீ கூடங்களை கண்டு பிடித்து வளர்க்கும் முறை, சேர்த்து வளர்க்கும் முறை, ராணீத் தேனி உற்பத்தி, மற்றும் இயற்கை எதிரி நிர்வாகம் ஆகியவை குறித்து பயிற்சி வழங்கப்படும்.*

*பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் பயிற்சி நாள் அன்று காலை 9 மணிக்கு பூச்சியியல் துறைக்கு தங்கள் செலவில் வர வேண்டும். மேலும் பயிற்சி கட்டணமாக ரூ.150–ஐ பயிற்சி நாளன்று செலுத்த வேண்டும். பயிற்சியானது காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை வழங்கப்படும். முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம். இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி ரவிக்குமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.*

## கோவை மாவட்டத்தில் சுயஉதவிக்குழு– விவசாயிகளுக்கு இலவச தொழிற் பயிற்சி

*கோவை,டிச.29–*

*தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில் மாநிலம் முழுவதும் உள்ள சுய உதவிக்குழுக்கள், விவசாயிகள், பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொருளாதார சுய நிர்ணயத்தைஏற்படுத்த திட்டமிட்டுள்ள.*

*இதற்காக அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறந்த கல்லூரியை தேர்வு செய்து, அந்த கல்லூரியில் அந்த திட்டத்துக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.*

*கோவைமாவட்டத்துக்கான பயிற்சி அளிக்க கோவை சிங்கா நல்லூரில் உள்ள கே.எஸ்.சி. கல்லூரி தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பாளராக அந்த*

*கல்லூரியை சேர்ந்த உயிர் தொழில் நுட்பத்துறை தலைவர் பேராசிரியர் வினிதா நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இந்த திட்டம் பற்றி அவர் கூறியதாவது–*

*இந்த திட்டம் 3 கட்டமாக செயல்படுத்தப்படுகிறது. முதல் கட்டமாக 100 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பொருளாதாரமேம்பாடு அடைவதற்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. அதில் மண்புழு உரம் தயாரித்தல், காளான் வளர்ப்பு, தோட்டக்கலை, மசாலா பொடி, ஊறுகாய் தயாரிப்பு, முதலுதவி சிகிச்சை, நீரிழிவு, நோய் ரத்த அழுத்தம் கண்டறிதல், ரத்தவகை கண்டறிதல் போன்ற மருத்துவ சிகிச்சை, மற்றும் கம்ப்யூட்டர் பயிற்சி, அலங்கார மீன் வளர்ப்பு, எம்ப்ராய்டரி, நகை தயாரிப்பு, கண்ணாடி ஓவியம், பொம்மை தயாரிப்பு, அச்சுதொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. விவசாயிகள் 100 பேருக்கு சொட்டுநீர் பாசனம், உரங்கள், திசு வளர்ப்பு முறையில் பயிரிடுதல்,நீர் சுத்திகரிப்பு,மீன் மற்றும் இறால் பண்ணை அமைத்தல் போன்ற நவீன விவசாய முறை பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.*

*பிளஸ்–2 மற்றும் 10–ம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அறிவியல் கண்காட்சி நடத்தப்படுகிறது.*

*இந்த 3 பிரிவுகளிலும் பயிற்சி பெற விரும்புகிறவர்கள் எங்கள் கல்லூரிக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம். பயிற்சிகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*